**20.01.2025**

**C.C. No.77/2024**

ம.**சா. 1 <u>தேன்மொழி</u>**

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் பத்தாம் வகுப்பு படித்திருக்கிறேன். ஆங்கிலம் எழுத படிக்கத் தெரியுமா என்றால் ஓரளவு தெரியும். ஆங்கிலம் எழுத தெரியாது. நான் வேலை எதுவும் செய்கிறேனா என்றால் வீட்டில் இருக்கிறேன். எனது கணவர் Account மூலமாகவும், உண்டியல் மூலமாகவும் பணம் அனுப்புவார். உண்டியல் சட்டவிரோதம் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது கணவர் வங்கி கணக்கு மூலம் பணம் அனுப்பியதை நிரூபணம் செய்ய தயாராக இருக்கிறேனா என்றால் தயாராக இருக்கிறேன். எந்த வங்கி கணக்கு என்றால் பாங்க் ஆப் பரோடா வங்கி கணக்கு. நான் எனது கணவர் கொடுக்கும் பணத்தை வைத்து கொடுக்கல் வாங்கல் தொழில் செய்கிறேனா என்றால் இல்லை. யாருக்கும் பணம் கொடுத்தால் எழுதி வாங்க வேண்டும் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும்.

கடனை வட்டிக்கு கொடுத்ததாக எனது வழக்கு என்றால் சரிதான். எதிரி எனது வீட்டில் 2017 முதல் சமையல் மற்றும் எனது வீட்டின் அனைத்து வேலைகளையும் பார்த்தார் என்றால் சரிதான். சமையல் வேலைக்கு எவ்வளவு சம்பளம் என்றாலும், வீட்டு வேலைக்கு எவ்வளவு சம்பளம் என்றாலும் மொத்தமாகத்தான் கொடுப்பேன் ரூ.3 ஆயிரம் சம்பளம் கொடுத்தேன். ரூ.3 ஆயிரம் சம்பளம் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் வீட்டு செலவுக்கு கையில் வைத்திருந்த பணத்தை வைத்து கொடுத்தேன். இவ்வழக்கு கடனை தவிர வேறு கொடுக்கல் வாங்கல் எதுவும் எனக்கும், எதிரிக்கும் இல்லையென்றால் சரிதான். நான் மகளிர் குழுவில் உறுப்பினரா என்றால் இல்லை. (சாட்சி தற்போது மகளிர் குழுவில் உறுப்பினராக இருப்பதாக மாற்றி கூறுகிறார்.)மகளிர் குழுவில் நான் கடன் பெற்று உள்ளேனா என்றால் கடன் பெற்றுள்ளேன்.

எதிரி மகளிர் குழுவில் இருக்கிறாரா என்றால் அது பற்றி தெரியாது. நான் பணம் கொடுக்கும்போது எனது மகள் மட்டும் இருந்தார். எனது வீட்டில் வைத்து கடன் கொடுத்தேன். 500 ரூபாய் நோட்டுகளாக 200 தாள்களும், இரண்டாவது தவணையில் 500 ரூபாய் நோட்டுகளாக 200 தாள்களும் மொத்தம் 400 தாள்கள் கொடுத்தேன். நான் அதனை வங்கி கட்டு சீலை எடுத்துவிட்டு கொடுத்தேன். எந்த வங்கியின் முத்திரை இருந்தது என்றால் பாங்க் ஆப் பரோடா மற்றும் ஆக்சிஸ் வங்கியிலிருந்து கொடுத்தேன். முதல் நாள் பாங்க் ஆப் பரோடாவிலும், அடுத்தநாள் ஆக்சிஸ் வங்கியிலிருந்தும் எடுத்து கொடுத்தேன். அதை என்னால் நிரூபணம் செய்ய முடியுமா என்றால் முடியும். பலவருடங்கள் ஆகிவிட்டது. சுமார் எத்தனை வருடங்கள் இருக்கும் என்றால் 4 வருடங்கள் இருக்கும். தேதி, மாதம் நினைவுள்ளதா என்றால் இல்லை. வழக்கு காசோலை எப்போது கொடுக்கப்பட்டது என்றால் 01.08.2023 அன்று கொடுக்கப்பட்டது. காசோலை கொடுத்தபோது யார் யார் உடன் இருந்ததார்கள் எங்கு வைத்து கொடுத்தார் என்றால் காரைக்குடி மாவட்ட துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் வைத்து கொடுத்தார்.

என்மீது எதிரி புகார் கொடுத்திருந்தார் அதனால் காவல்நிலையத்தில் விசாரணை நடைபெற்றது அங்கு வைத்து காசோலையை கொடுத்தார். காசோலையை யார் பூர்த்தி செய்தது என்றால் வங்கியில் இருந்து ஒரு பெண் எழுதிக்கொடுத்தார் எனக்கு எழுத தெரியாததால் அவரை எழுத கேட்டேன். அந்த பெண் என்னை போல் வங்கி வந்த நபர் ஆவார். அவர் யார் என்று எனக்கு தெரியாது. அந்த காசோலையை எழுதும்போது நானும், அந்த பெண்ணும் வங்கியில் இருந்தோம். அந்த பெண் எழுதிக்கொடுத்துவிட்டு சென்றுவிட்டார். காசோலையில் உள்ள கையொப்பத்தை யார் செய்தார் என்றால் எதிரி செய்தார் எங்கு வைத்து எதிரி கையொப்பம் செய்தார் என்று தெரியாது. கையொப்பம் செய்திருந்த நிலையில் காசோலையை கொடுத்தார்.

எதிரி கொடுத்த பதில்அறிவிப்பை படித்து பார்த்தேனா என்றால் நான் படித்து பார்க்கவில்லை கேட்டு தெரிந்து கொண்டேன். வழக்கு காசோலையில் உள்ள கையொப்பம் எதிரியின் கையொப்பம் இல்லையென்றால் சரியல்ல. வழக்கு காசோலையை எதிரி அதில் கண்டுள்ள தேதி மற்றும் தொகைக்கு என்னிடம் வழங்கவில்லையென்றால் சரியல்ல. மகளிர் குழுவில் கடன் பெறுவதற்காக எதிரி கொடுத்திருந்த காசோலையை எவ்வகையிலோ பெற்று அதில் போலியாக கையொப்பம் செய்து எதிரியின் அனுமதியின்றி வசூலுக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் வங்கியில் எனது செல்வாக்கை பயன்படுத்தி காசோலையை திருப்பச் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. காவல்நிலையத்தில் விசாரணை நடைபெற்ற விவரத்தை இவ்வழக்கில் சொல்லவில்லையென்றால் சரிதான்.

காவல்நிலைய விசாரணையில் நான் வனிதா என்பவருக்கு ரூ.60 ஆயிரம் கொடுத்திருப்பதாகவும், அதில் பாக்கி தொகை ரூ.10 ஆயிரத்தை காவல்நிலைய விசாரணையில் பெற்றுக்கொண்டதாக எழுதிக்கொடுத்திருக்கிறேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் காவல்நிலையத்தில் நான் கொடுத்த வாக்குமூலம் என்றால் நான் எழுதவில்லை எழுதி கையொப்பம் பெறப்பட்டது. அது 26.07.2023 தேதியில் எழுதப்பட்டது ஆகும். மேற்படி வாக்குமூலம் காரைக்குடி உதவி காவல்கண்காணிப்பாளர் அலுவலகத்தில் எழுதப்பட்டது என்றால் சரிதான். அந்த விசாரணைக்கு எதிரியின் புகார் குறித்த விவரங்களை தெரிந்து கொண்டு தான் சென்றேன் என்றால் சரிதான். எதிரி எனக்கு செலுத்த வேண்டிய பாக்கி எதுவும் இல்லையென்றாலும், அதற்காக இவ்வழக்கு காசோலை கொடுக்கப்படவில்லையென்றால் சரியல்ல. எதிரியின் காசோலையை தவறாக பயன்படுத்தி பொய்யாக இவ்வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. ரூ.2 லட்சம் கொடுப்பதற்கு எனக்கு வசதி வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

( ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா , B.Sc., B.L., (Hon's))
விரைவு நீதிபதி காரைக்குடி